
11.ஐப்பசி.2021 பக்கங்கள் - 04





# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06





மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 32

## மாநகர சபையை குழப்பி அபிவிருத்திகளை தடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுப்பு



தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கும் மட்டக்களப்பு மாநகர சபையினை குழப்புவதும் அதன் மூலமாக அபிவிருத்திகளை தடுப்பதற்குமான நோக்குடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

நேற்று (10) மாலை மட்டக்களப்பு மாநகர சபையில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த அவர், மட்டக்களப்பு மாநகர சபையில் 150க்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் உள்ளனர். இவர்களது நியமனங்களை புதுப்பிக்கும் போது எந்த நியமனமும் எதிர்வரும் காலங்களில் மேற்பார் வையாளரின் உறுதிப்படுத்தலும் முதல்வரின் அனுமதி கிடைத்த பின்னர் தான் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவேண்டும் என்று ஜூன் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (03)

## மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துச் சேவை மீண்டும் ஆரம்பமாகும் திகதி அறிவிப்பு




மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத் துச் சேவையை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கக்கூடிய தாக இருக்கும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு எதிர்வரும் 21 ஆம் திகதி தளர்த்தப்படும் என்று தற்போது சுகாதார பிரிவினால் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார். (03)

## டெல்லியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது சென்னை



ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் தொடரின் முதல் தகுதிச்சுற்று துபாயில் நடைபெற்றது. இதில் டெல்லி கேப்பிடல்ஸ் – சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டொஸ் வென்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கேப்டன் எம்.எஸ். டோனி பந்து வீச்சை தேர்வு செய்தார். (03)

## லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைகள் அதிகரிப்பு




லிட்ரோ நிறுவனம் தனது சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரித்துள்ளது. அதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1,257 ரூபாவால் அதிக ரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2,750 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது. (03)

## இலங்கை தமிழர்கள் யாரையும் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பமாட்டோம்

அகதிகள் முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் யாரையும் கட்டாயப்படுத்தி இலங்கை அனுப்ப மாட்டோம். அவர்களின் ஒப்புதல்படியே செயல்படு வோம் என தமிழக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக் கின்றன.

சென்னை நந்தனத்தில் அலீப் மருத்துவ அறக் கட்டளையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். (03)



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## விலையேற்றங்களால் மக்கள் பாதிப்பு

நாட்டில் பரவியிருக்கும் கொவிட் தொற்றுக்கு மத்தியில், நாளாந்த தொற்றாளர்கள் மற்றும் நாளாந்த மரணாங்களின் எண்ணிக்கையிலும் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் காரணமாக நாடு தற்போது திறக்கப்பட்டுள்ளதாக அரசு கூறிவரும் நிலையில், விரைவில் மாகாணாங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்களும் முழுமையான இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டினுடைய பொருளாதாரம் கொவிட் பரவலால் வெகுவாகப் பாதித்துள்ளதாக அரச தரப்பு கூறி, சர்வதேச நாடுகளிடமிருந்து கடன்களைப் பெற்று வருகின்றது.

இதனைக் காரணமாக வைத்து நாட்டில் பால்மா, அரிசி வகைகள், சீனி, சமையல் எரிவாயு, சீமெந்து, கோதுமை மா என அத்தியாவசியப் பொருட்களுக்கும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஏற்கனவே பொருளாதார ரீதியாக பாதிப்படைந்திருந்த மக்கள் அல்லல்படுகின்றனர்.

அரசின் இவ்வாறான திடீர்ச் செயற்பாடுகளால் மக்கள் அரசின் மீது அதிருப்தி அடைந்துள்ளனர். இதன் காரணமாக தற்போதைய சூழலில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் இழுத்தடிப்பைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

தனியார் துறைகளில் வேலை செய்பவர்கள் இவ் விலையேற்றங்களால் இன்று பெரிதும் பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தினசரி கூலிக்கு வேலை செய்யும் நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நாளொன்றுக்கான சம்பளத்தில் பெரிதாக மாற்றங்கள் செய்யப்படவில்லை. நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

வங்கிகளில் கடன்களைப் பெற்றிருந்த மக்கள் இன்று அவற்றைச் செலுத்த முடியாமல் அல்லல்படுகின்றனர். வாகனாங்களுக்கு லீசிங் பணத்தை செலுத்த முடியாமல் கடன் சுமைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த கொவிட் பரவல் நிலைமையினை அரசு உரிய முறையில் கையாளத் தெரியாமல் தடுமாறியமையே இன்று இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

நாட்டில் உர இறக்குமதிக்குத் தடையினை விதித்து அண்டை நாடுகளிடமிருந்து அரிசியினைக் கொள்வனவு செய்வதில் அரசு அக்கறை காட்டி வருகிறது. இதனால் இன்று விவசாயிகள் நெற்பயிர்ச்செய்கையினை கைவிடும் நிலைக்கு வந்துள்ளனர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களும் இன்று பாதிப்படைந்துள்ளனர். எனவே தொடர்ச்சியாக இவ்வாறான விலையேற்றங்களை நாட்டில் அமுலில் வைத்துக்கொண்டு, இவ்வரசு தொடர்ந்தும் இந்நாட்டை ஆட்சி செய்வதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதை கருத்திற்கொண்டு, முறையான நிலையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் அதிகரிப்பு



*இன்று முதல் கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*செரண்டிப் மற்றும் பிரீமா நிறுவனங்களால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

**மேல் மாகாணத்தில் குற்றத்தடுப்பு மற்றும் ஊழல் மோசடி தொடர்பில் விஷேட சுற்றிவளைப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

**நேற்று (10) காலை 8 மணி முதல் 4 மணி வரையான காலப் பகுதியில் குறித்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**இதன்போது 816 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**கைது செய்யப்பட்டவர்களுள் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 17 பேரும், நீதிமன்றத்தை நிராகரித்த 49 பேரும், போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 665 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**நாட்டில் மேலும் 35 கொவிட் மரணங்கள் நேற்று (10.10.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,331 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 720 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 526,383 ஆக அதிகரித்துள்ளது.**

## சீமெந்தின் விலையிலும் மாற்றம்

*சீமெந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதனடிப்படையில் 50 கிலோ கிராம் சீமெந்து 93 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*



## நீர் மட்டம் உயர்வு - வான் கதவுகள் திறப்பு

*மத்திய மலை நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலையினை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருகிறது. நேற்று (10) இரவு முதல் நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக ஆறுகள், நீரோடைகள் பெருக்கெடுத்துள்ளன.*

*நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளன. இதனால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகளும், மஸ்கெலியா - மவுஸாக்கலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகளும், கெனியோன் நீர்த்தேக்கத்தில் ஒரு வான் கதவும், லக்ஷபான நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவும் இன்று (11) காலை திறக்கப்பட்டன.*

*காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் இன்று காலை 50 மில்லி மீற்றரிற்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளன.*

*இதனால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதேவேளை நோர்ட்டன் பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப் பகுதியில் கடுமையான மழை பெய்து வருவதனால் அந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் பாய்கின்றன.*

*எனவே, நீர்த்தேக்கத்திற்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.*

*-மலையக நிருபர் கிரிஷாந்தன்-*

## மாநகர சபையைக் குழப்பி...

இந்த நிலையில் கடந்த மாதம் 03 உத்தியோகத்தர்களுக்கு சேவை நீடிப்பு கோரிக்கை வழங்கப்பட்டிருந்தது. ஏற்கனவே, எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நீடிக்கப்படாலம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தெளிவான தீர்மானத்தினை விளங்கிக் கொள்ளாமல் மாநகர சபை ஆணையாளர் அவருக்கு நியமனம் வழங்கியுள்ளார். இது மாநகர சபையின் சட்டத்தினை மீறிய செயற்பாடாகும். மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் மாநகர சபை தீர்மானங்களுக்கு எதிராக எந்தவித செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது. நியமனங்களை பிழையான வகையில் வழங்கினால் சபை அதனை பொறுப்பேற்காது, நானும் பொறுப்பேற்க முடியாது.

அவ்வாறு பிழையான நியமனங்களை வழங்கும்போது அவர்களுக்கு சம்பளம் வழங்கும் போது எங்கள் அனுமதிக்கு அவை வரும்போது தான் எங்களால் சிபாரிசு செய்யப்படாத ஒருவருக்கு சட்டவிரோதமாக நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சட்டவிரோதமாக வழங்கப்பட்ட நியமனம் பற்றியும் அதனால் ஏற்பட்ட பிரச்சினை பற்றியும் மாகாண சபையின் கீழிருக்கின்ற அதிகாரிகளுக்கு தெளிவாக அறிவித்திருக்கின்றோம், உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்திருக்கின்றோம். இது சம்பந்தமாக அவருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு பிரதம செயலாளருக்கு அறிவித்திருக்கின்றோம், ஆளுநருக்கு அறிவித்திருக்கின்றோம். இவர்கள் இதுவரையே எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் உள்ளூராட்சி ஆணையாளர் தெளிவான விளக்கம் கோரியிருக்கின்றார். மாநகர சபைத் தீர்மானத்தை மீறி உங்களால் எவ்வாறு நியமனம் வழங்க முடியும் என்றும் உடனடியாக இது சம்பந்தமான விளக்கத்தை வழங்குமாறும் அவர் கேட்டிருக்கின்றார். அத்துடன் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருக்கின்றார். அதற்கு பதிலளிக்கும் முகமாக ஆணையாளர் எனக்கு பிரதியிட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார். பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றார். 5 நாட்கள் கடந்துவிட்டன. ஆனால் அவர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மாநகரசபையில் இருந்த திறப்புகள் அனைத்தும் களவாடப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நான் வேலைப் பகுதிக்கு பொறுப்பாக இருக்கின்ற பொறியியலாளருக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றேன். இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் உரியவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு நான் அவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றேன்.

ஆனால் இன்று வரை பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை. வேண்டுமென்று மாநகர சபைச் செயற்பாட்டை முடக்குவதற்கும் பொதுமக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குவதற்குமாகவே இங்கு நிர்வாகத்தில் இருக்கின்ற ஆணையாளர் இருக்கின்றார். எடுக்கப்பட்ட தீர்மானங்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், ஆணையாளருக்கு விளக்கம் கோரி வந்த கடிதங்கள் அனைத்தும் இருக்கின்றன. ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்ற ஆணையாளரின் கடிதமும் இருக்கின்றது. அலுவலக ரீதியாக இவை அனைத்தையும் செய்துவிட்டு களத்தில் வேறு முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அலுவலக உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையாளர் முயற்சிப்பார் என நினைக்கின்றேன். பிழையாக வழங்கப்பட்ட நியமனம் மீளப் பெறப்பட வேண்டும். அதன்பின்பு வரவிருக்கின்ற எங்களுடைய சபைக் கூட்டத்தில் அவர் கடமை புரிந்த காலத்திற்கான கொடுப்பனவை எவ்வாறு வழங்குவது என்பதை தீர்மானிக்கலாம்.

குறிப்பிட்ட நபர் தவிர்ந்த அனைவரும் வேலைக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் வேலைகளில் எந்தவித தாமதமும் இருக்கக்கூடாது எனவும் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கி இருக்கின்றார். ஆனால் இவை அனைத்தும் உதாசீனம் செய்யப்பட்டு பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் நான் இன்று எமது அபிவிருத்திக்குழு இணைத் தலைவருடனும் கலந்துரையாடினேன். அவருக்கும் இது தொடர்பில் தெளிவின்மை இருந்த காரணத்தினால் நான் இது தொடர்பான ஆவணங்களை அவருக்கு அனுப்பி வைத்துள்ளேன். அவரும் இது தொடர்பில் ஆணையாளருடன் கதைப்பார் என நம்புகின்றேன். மாநகரசபையின் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு ஆணையாளர் தன்னால் விடப்பட்ட பிழைகளை திருத்திக்கொள்ள வேண்டும். அவர் திருத்தும் பட்சத்தில் மாநகர சபையானது ஒழுங்காக இயங்கும். குறித்த நியமனம் வழங்கப்பட்ட நபருக்கு எதிராக ஏற்கனவே சில ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஜி.கே பவுண்டேசனால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த அமரர் ஊர்தியானது இங்கே தரித்து வைக்கப்பட்டிருந்தது. ஆணையாளர் அவர்கள் இந்த விடயத்தில் தீவிரமாக தலையிட்டு அந்த வாகனத்தை சேதப்படுத்தி எங்கள் தீர்மானங்களை மீறி அதனை அப்புறப்படுத்தியபோது குறித்த நபரே சாரதியாக செயற்பட்டிருந்தார். இது தொடர்பிலான வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த வழக்கு தீர்ப்பு வழங்கப்படும்வரை இவருக்குரிய நியமன நீடிப்பை எங்களால் வழங்க முடியாது. மாநகர சபை முதல்வரின் அனுமதியின் பின்பு தான் நியமனக் கடிதங்கள் வழங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த தீர்மானத்தை மீறி இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. மாநகரசபை கட்டளைச் சட்டத்தை மீறிய இந்த செயலை எங்களால் அனுமதிக்க முடியாது.

இதற்கு உடனடியாக மாநகர சபை நிர்வாக ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய உள்ளூராட்சி ஆணையாளர், பிரதம செயலாளர் ஆகியோர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாகனங்களுக்குப் பொறுப்பாக பொறியியலாளர் இருக்கின்ற போது வேலைப் பகுதி முழுமையாக ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டு பொறியியலாளரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேளை பொறியியலாளரின் பணிப்புரைக்கு அமையவே உத்தியோகத்தர்கள் வேலை செய்ய வேண்டும். ஆணையாளரின் பணிப்புரைக்கமைய வேலை செய்ய முடியாது. ஆணையாளரிடமிருந்து அதிகாரங்களை பெற்ற பின்பு அவருக்கு இருக்கின்ற நேரடி அதிகாரம் 254 யுக்குக் கீழ் அறவிடவேண்டிய மிந்திய அறவீடுகளை அறவிடுவதும் வீதியோர வியாபாரத்தை தடை செய்வதுமாகும். மிகுதி அனைத்தும் மீளப்பெறப்பட்டு வேறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதை மீறி அவரால் செய்யப்படுகின்ற அனைத்தும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தை மீறுகின்ற செயற்பாடாகவே இருக்கும். இவ்வாறு அவரால் அத்துமீறி செய்யப்பட்ட 27 க்கும் மேற்பட்ட சட்டமீறல்கள் எங்களால் ஆவணப்படுத்தப்பட்டு பிரதம செயலாளருக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் ஆளுநருக்கும் உரிய அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதற்கான நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் எமது பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

கிழக்கு மாகாணமானாலும் வட மாகாணமானாலும் இலங்கைக்கு ஒரு சட்டம் தான். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தை மீறி ஒருவர் செயற்படும் போது அவருக்கு எதிராக நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றவர்களால் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் பெப்ரவரி மாதத்திலேயே அவர் இங்கிருந்து அகற்றப்பட்டிருப்பார். நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது. எங்களால் அமுல்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் பல அமுல்படுத்தப்படவில்லை. உத்தியோகத்தர்கள் பலர் பிழையாக வழிநடத்தப்படுகின்றனர். 2021 ஆம் ஆண்டிற்கான வேலைகள் இன்னும் தொடங்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டிற்கான 17 வேலைகள் இன்னும் முடிக்கப்படவில்லை. இவை தொடர்பில் நாங்கள் ஆளுநருக்கோ பிரதம செயலாளருக்கோ அறிவுறுத்தினாலும் எந்த நடவடிக்கையுமில்லை. ஆனால் உள்ளூராட்சி ஆணையாளர் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இதன் காரணமாகத்தான் நாங்கள் மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக வழக்கு தொடுத்தோம். தடையுத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது.

தடையையும் மீறி 87 குற்றங்கள் செய்யப்பட்டதன் பேரில் நாங்கள் நீதிமன்ற அவதூறு வழக்கு போட்டோம்.

அதில் அவர் பத்து இலட்சம் சரீரப் பிணையில் வெளிவந்திருக்கின்றார். அதன்படி அவர் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டு அவருக்கு எதிராக ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும் அது செய்யப்படவில்லை. நிர்வாகமே பிழையாக நடப்பதற்கு தூண்டும் செயலாகவே இதனை நான் கருதுகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் இருக்கின்ற இந்த மாநகர சபையை முடக்குவதும் அதன் மூலம் அபிவிருத்திகளை தடுப்பதுமே இதன் முழு நோக்கமாகும் என சுட்டிக்காட்டினார். -மட்டக்களப்பு நிருபர் கிருஷ்ணகுமார்-

## மாகாணங்களுக்கிடையிலான...

கண்டியில் நேற்று (10) ஊடகங்களுக்கு இது தொடர்பாக தெரிவிக்கையில், மாகாணங்களுக்கு இடையில் பஸ் மற்றும் ரயில் சேவை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மாணவர்களுக்காக விசேட பஸ் சேவையை ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்து சபை எதிர்பார்த்திருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## டெல்லியை வீழ்த்தி...

அதன்படி, முதல் அணி டெல்லி கேப்பிடல்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 172 ரன்கள் எடுத்தது. பிரித்வி ஷா அதிரடியாக ஆடி 60 ரன்னும் எடுத்தார். ஹெட்மையர் 37 ரன்கள் அடித்தார். ரிஷாப் பண்ட் 51 ரன் எடுத்து அவுட்டாகாமல் இருந்தார்.

சென்னை அணி சார்பில் ஹேசில்வுட் 2 விக்கெட்டும் ஜடேஜா, மொயீன் அலி, பிராவோ தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 173 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது. டுபிளசிஸ் ஒரு ரன்னில் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார்.

அடுத்து இறங்கிய ரொபின் உத்தப்பா அதிரடியாக ஆடினார். அவர் 44 பந்தில் 2 சிக்சர், 7 பவுண்டரி உள்பட 63 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். ஷர்துல் தாக்குர் ரன் எடுக்காமலும், அம்பதி ராயுடு ஒரு ரன்னிலும் அவுட்டாகினர். ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் ருதுராஜ் கெயிக்வாட் சிறப்பாக ஆடி அரை சதமடித்து 70 ரன்னில் வெளியேறினார்.

இறுதியில், சென்னை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்றது. இதன் மூலம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. **(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)**

## இலங்கை தமிழர்கள்...

இந்நிகழ்வில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தா.வேலு, தி.நகர் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். அதனை தொடர்ந்து ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அமைச்சர் செஞ்சி மஸ்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் 110 இன் விதியின் கீழ் இலங்கை வாழ் தமிழர்கள் தமிழகத்தில் 108 முகாம்களில் வசித்து வருகின்றனர். 2 முகாம்கள் காவல்துறை கட்டுபாட்டில் உள்ளது. மற்ற 106 முகாம்களில் 12 முகாம்களுக்கு சென்று நான் ஆய்வு செய்த போது, அந்த ஆய்வின் அறிக்கையின் படி முதல்வர் கலைஞரின் திட்டம் தொடரவேண்டும் என்று அகதிகள் தெரிவித்தனர்.

317 கோடி ரூபாய் செலவில் அவர்களுக்கு உணவு, உடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் புதிதாக வீடுகள் கட்டி தரக்கூடிய திட்டம், கல்வி திட்டம், படித்தவர்களுக்கு தனியார் நிறுவனத்தில் வேலை வாங்கி தரும் நிலையை உருவாக்கும் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் வகுக்கபட்டு அவை செயல்படுத்தபட்டு தொடர்ந்து அரசின் உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 18 அரசாணைகளை முதல்வர் போட்டுள்ளார். தற்போது கூட 3 அரசாணைகளுக்கு நான் கையொப்பமிட்டு வந்துள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார். தொடர்ந்து, இலங்கை வாழ் தமிழர்களுக்கு சிலிண்டர் வழங்கும் பணி நடைபெற்று வருவதாக தெரிவித்தார். அமைச்சர் என்ற முறையில் நாங்கள் எப்போதும் இலங்கை தமிழர்களை காப்பவர்களாக இருப்போம். யாரையும் கட்டாயபடுத்தி இலங்கை அனுப்ப மாட்டோம், அவர்களின் ஒப்புதல் படியே செயல்படுவோம் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் மேலும் தெரிவித்துள்ளார்.

## லிட்ரோ சமையல்...

**அதேபோல், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை 503 ரூபாவாலும், 2.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை 231 ரூபாவாலும் அதிகரிக்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது. அதன்படி, 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை புதிய விலை 1,101 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 2.5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விலை 520 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.**

## சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் குறித்து ஐ.நாவின் அறிக்கை வெளியீடு



பயங்கரவாதம் குறித்து ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில், சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் குறித்த இந்தியாவின் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில், 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பினர் பொறுப்பேற்றனர். இந்நிலையில் அந்த பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின், 15 உறுப்பு நாடுகளும் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டன.

ஆப்கானிஸ்தானில் மத வழிபாட்டு தலங்களில் கொடூரமான தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் மசூதியில் ஐ.எஸ்., பயங்கரவாதிகள் நடத்திய கோழைத்தமான தற்கொலைப்படை தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் பயங்கரவாதத்தை ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்பு நாடுகள் தொடர்ந்து எதிர்க்கும் அது மிகப்பெரிய குற்றம் அதை ஒருபோதும் ஏற்கமாட்டோம் என அதில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா.,பாதுகாப்பு கவுன்சிலின் இந்த அறிக்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் குறித்த இந்தியாவின் கருத்துக்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றை நீர்த்துப்போக செய்ய சிலர் முயற்சித்ததாகவும், எனினும் அந்த அறிக்கையில் தங்கள் கருத்து இடம்பெறவேண்டியதில், இந்தியா உறுதியாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

## ஈராக் தேர்தலில் முன்கூட்டியே வாக்குப்பதிவு



ஊழல், வேலைவாய்ப்பு, அரசு சேவைகளின் ஒழுங்கின்மை உள்ளிட்டவற்றின் காரணமாக ஈராக்கில் 2019ஆம் ஆண்டு நடந்த மிகப்பெரிய போராட்டங்களுக்கு பிறகு அந்த நாடு முதல்முறையாக நாடாளுமன்ற தேர்தலை சந்திக்கிறது. நேற்றிலிருந்து அதற்கான வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

போராட்டங்கள் காரணமாக அடுத்த ஆண்டு நடைபெற இருந்த நாடாளுமன்ற தேர்தல் தற்போது ஆறு மாதங்களுக்கு முன்கூட்டியே நடத்தப்படுகிறது. அரசியல் கட்சிகள் மட்டுமே போட்டியிடக்கூடிய ஈராக் தேர்தல் 2019இல் நடந்த போராட்டங்கள் காரணமாக சுயேச்சை வேட்பாளர்களும் பங்கேற்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளது.

அக்டோபர் – டிசம்பர் 2019இல் நடந்த போராட்டங்களின்போது சுமார் 550 போராட்டக்காரர்கள் நாடு முழுவதும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இம்முறையும் பெரும்பான்மை இனத்தவரான ஷியா முஸ்லிம்களே பெரும்பாலான இடங்களை கைப்பற்றுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் 2003ஆம் ஆண்டு ஈராக் மீது படையெடுத்த பின்பு சதாம் ஹுசேனின் ஆட்சி அகற்றப் பட்டது. அப்போதிலிருந்து நடந்த தேர்தல்களில் ஷியா முஸ்லிம்களே ஈராக் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

## சீனாவின் மிரட்டலுக்கு தைவான் பதிலடி



சீனாவுடன் தைவானை இணைக்கப்போவதாக அந் நாட்டு அதிபர் விடுத்துள்ள மிரட்டலுக்கு தைவான் ஒருபோதும் அடிப்பணியாது என அந்நாட்டு அதிபர் சாய் இங் வென் தெரிவித்துள்ளார்.

தைவான் உலகளவில் நிகழ்த்தி வரும் சாதனைகளுக்கு நிகராக சீனாவின் அழுத்தமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

மேலும் சீனாவுடன் அமைதியான உறவை மட்டுமே தைவான் விரும்புவதாகவும். அதேபோல அவர்கள் கொடுக்கும் அழுத்தத்திற்கு தாய்வான் மக்கள் ஒரு போதும் அடிபணியமாட்டார்கள் என்றும் சாய் இங் வென் தெரிவித்தார்.

## இருளில் மூழ்கியது லெபனான்



லெபனானில் எரிபொருள் தட்டுப்பாடால், இரண்டு பிரதான மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் ஒட்டுமொத்த நாடே இருளில் மூழ்கி உள்ளது.

மேற்காசிய நாடான லெபனான் பல ஆண்டுகளாக கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. அமெரிக்க டொலருக்கு நிகரான லெபனானின் நாணய மதிப்பு கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இதனால் எரிபொருள் ஏற்றுமதியை நம்பி இருக்கும் லெபனான் மின் வாரியம், தற்போது பெரும் சவாலை சந்தித்து வருகிறது. இந்த மின் வாரியம் 11 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக ஆண்டுதோறும் நஷ்டத்தை சந்தித்து வருகிறது.

இந்நிலையில் எரிபொருள் தட்டுப்பாடால் நாட்டில் இயங்கும் இரண்டு பிரதான மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டு உள்ளன. இதனால் 270 மெகாவோட் மின்சாரத் திற்கும் குறைவாகவே மொத்தமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் ஒட்டுமொத்த நாடே இருளில் மூழ்கி உள்ளது. மருத்துவமனைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் வழங்கும் இடங்களில் மின்சாரம் இல்லாததால், நோயாளிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.

லெபனானில் இதுவரை தினமும் மூன்று முதல் ஆறு மணி நேரம் வரை மட்டுமே மின் தடை இருந்து வந்தது. இந்நிலையில் இந்த மின் உற்பத்தி நிறுத்தத்தால், இனி ஒரு நாளுக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே மின்சாரம் வினியோகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியை சமாளிக்க, ஈரானில் இருந்து எரிபொருளை லெபனான் அரசு இறக்குமதி செய்துள்ளது.

ஈராக், ஜோர்டான், எகிப்து உள்ளிட்ட நாடுகளிடமும் உதவி கோரப்பட்டுள்ளது. இதற்கிடையே, மானியம் நிறுத்தப்பட்டுள்ளதால், சமையல் எரிவாயு சிலிண்டர்களின் வினியோகமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் இன்னலுக்கு ஆளாகி உள்ளனர். கடந்த மார்ச்சிலும் இதுபோல் லெபனானில் மின் தடை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானின் அணு ஆயுத தந்தை காலமானார்

பாகிஸ்தான் அணு ஆயுதத்தின் தந்தை எனப் போற்றப்பட்ட அப்துல் காதிர் கான் உடல்நலக் குறைவால் காலமானார், அவருக்கு வயது 85.

இந்தியாவில் பிறந்தாலும் சூழ்நிலையால் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து, முதன்முதலில் அணு ஆயுதத்தை வடிவமைத்து கொடுத்தவர் அப்துல் காதிர் கான். எனினும் பல்வேறு காரணங்களினால் கடந்த 2004ம் ஆண்டு முதல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். ஆனால் 2009ம் ஆண்டு நாட்டுக்குள் எங்கு வேனாலும் அப்துல் காதிர் கான் சுற்றித்திரியலாம் என இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்நிலையில் வயது முதிர்வால், உடல்நலக்குறைவு மற்றும் திடீர் மூச்சு திணறால் அவதிப்பட்டு வந்த அப்துல் காதிர் கான் அதிகாலை சிகிச்சை பலனின்றி காலமானார். இவரது மறைவு மிகுந்த வேதனையளிப்பதாகவும், இவரின் சேவையை பாகிஸ்தான் மறக்காது எனவும் ஜனாதிபதி ஆரிப் அல்வி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயல்கள் மூலமே தலிபான்கள் மதிப்பிடப்படுவார்கள் - அமெரிக்கா



ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான்கள் தங்களது செயல்கள் மூலமாகவே மதிப்பிடப்படுவார்களே அன்றி, அவர்களது சொற்கள் மூலமாக அல்ல என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஆப்கானிஸ்தானில் ஆட்சி மாறிய பிறகு கத்தார் தலைநகர் தோஹாவில் நடந்த முதல் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்தக் கருத்தை அமெரிக்கா தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

இது தொடர்பாக வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் வெளியிட்ட அறிக்கையில், "பாதுகாப்பு, பயங்கரவாதம் தொடர்பான கவலைகள் மற்றும் அமெரிக்க குடி மக்கள் பத்திரமாக வெளியேறுவது ஆகியவற்றை மையப்படுத்தியே பேச்சுவார்த்தை இருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நேரடியாக மனிதநேய உதவிகளைச் செய்வது குறித்து இருதரப்பும் விவாதித்ததாகவும் பிரைஸ் கூறியுள்ளார். தலிபான்களுடனான பேச்சுவார்த்தை நேர்மையாகவும் அலுவல் ரீதியாகவும் இருந்ததாக பிரைஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தங்கள் வசமுள்ள அமெரிக்க பத்திரிகையாளரை விடுவிக்கவேண்டும் என பைடன் நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தது.